தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

ஆணை எண்: 104 /பேரூ/2026
நாள் : 29.09.2026

B. சுதேஷ், – முறையீட்டு மனுதாரர்
சீராப்பள்ளி,
நாமக்கல் மாவட்டம்.

செயல் அலுவலர்,
சீராப்பள்ளி பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம். - எதிர் மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சீராப்பள்ளி, ஐயங்காடு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் எதிரில் எண். 68A vன்ற முகவரியில் வசிக்கும் திரு. B. சுதேஷ் என்பவரின் 11.04.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.04.2026 அன்று பெறப்பட்டு, 104/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சீராப்பள்ளி, ஐயங்காடு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் எதிரில் எண். 68A என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு. B. சுதேஷ் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த 11.04.2026 நாளிட்ட முறையீட்டு மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், சீராப்பள்ளி கிராமம், சீராப்பள்ளி பேரூராட்சிக்கு உட்பட்ட தாரணிராசி நகர் பூங்கா 17,000 சதுர அடி நிலம் உள்ளது.

தாரணிராசி நகர் 17,000 சதுர அடி நிலத்தில் கலைஞர் நூற்றாண்டு பூங்காவிற்கு 10,000 சதுர அடி நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 7,000 சதுர அடி நிலத்தில் விநாயகர் கோவிலை ராஜேந்திரன் S/o சொக்கலிங்கம் தனக்கென கட்டிக் கொண்டார். இங்கு வேறு ஒரு விநாயகர் கோவில் பொதுமக்கள் வழிபாட்டுக்கு என தனியாக உள்ளது.

தமிழ்நாடு மின்வாரியம் மின்மாற்றி SS4/200KVA ஓவர் லோடாக இருந்ததால் புதிய மின்மாற்றி தாரணிராசி நகர் பகுதியில் அமைத்து ஸ்ரீராம் நகர் மற்றும் காமராஜர் நகர் மற்றும்

விவசாய மின் இணைப்பு மற்றும் சிறு தொழில் மின் இணைப்பு ஆகியோர் நலன் கருதி அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

மின்மாற்றி SS4-200KVA ஓவர்லோடாக இருந்ததால் அடிக்கடி பழுது ஏற்பட்டு கொண்டிருந்தது. இந்த மின்மாற்றியில் இருந்துதான் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மின் சப்ளை சென்றது. தமிழ்நாடு மின்சார வாரியம் நல்ல நோக்கத்திற்காக தடையில்லா மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் சீராப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலர், ராஜேந்திரன் S/o சொக்கலிங்கம் என்ற நபரின் சொல்படி செயல்பட்டார்.

ராஜேந்திரன் S/o சொக்கலிங்கம் என்ற நபர் ஆட்சேபனை கடிதம் கொடுத்தவுடன் அவருக்கு சாதகமாக செயல்பட்டது தெரிய வருகிறது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் அரசு பொது பூங்காவில் கோவில் கட்டக் கூடாது என உத்தரவு பிறப்பித்த நிலையில் ஏன் இதுநாள் வரை நடவடிக்கை சீராப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலர் எடுக்கவில்லை.

தமிழ்நாடு மின்வாரியத்திற்கு 100 சதுர அடி நிலம் ஒதுக்க சீராப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலர், எந்த சட்டத்தின் அடிப்படையில் 7,000 சதுர அடி தனி நபருக்கு ஒதுக்கப்பட்டது என்ற விவரம் தெரியவில்லை ஒரு தனி மனிதன் கோவில் கட்டிக் கொள்ளலாம் என அரசாணை அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் சுற்றறிக்கை உள்ளதா என செயல் அலுவலர் விளக்க வேண்டும்.

சீராப்பள்ளி பேரூராட்சி தாரணிராசி நகர் பூங்கா நிலம் 7,000 சதுர அடி நிலத்தை உடனடியாக மீட்க வேண்டும் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 28.04.2026 நாளிட்ட அறிவிப்பின் மூலம் சீராப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து எவ்வித அறிக்கையும் பெறப்படவில்லை.

3. எனினும் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான சீராப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை இம்முறைமன்றத்தில் 14.08.2026 அன்று நடைபெறவிருக்கும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் மற்றும் விரிவான அறிக்கையுடன் ஆஜராகுமாறு 30.07.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இதற்கிடையில் எதிர்மனுதாரரான சீராப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 28.07.2026 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 102/2026ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு தனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

"நாமக்கல் மாவட்டம், சீராப்பள்ளி பேரூராட்சிக்குட்பட்ட சீராப்பள்ளி கிராமம், சர்வே எண். 200/14 முதல் 201/1,2,3A,3-Bல் 3.60 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு மனை பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கி, சேலம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களால் கடித ந.க.எண். 1320/2003/சே.ம.3 , நாள் 05.06.2003ல் ஆணையிடப்பட்டுள்ளது.

சீராப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறை ஆணை ந.க. எண்.201/2003, நாள் 09.09.2003ன்படி மேற்படி மனை பிரிவில் 1 முதல் 69 வரை உள்ள குடியிருப்பு மனைப்பிரிவு மற்றும் வணிக மனைகளை பதிவு செய்து கொள்ள இறுதி அங்கீகாரம் அளித்து தடையின்மை சான்று வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி அங்கீகாரம் வழங்கப்பட்ட மனை பிரிவில் சாலை பயன்பாட்டிற்காக 24924 ½ சதுர அடி நிலமும், பூங்கா பயன்பாட்டிற்காக 15800 சதுர அடி நிலமும் ஆக மொத்தம் 40724 ½ சதுர அடி நிலத்தினை செயல் அலுவலர், சீராப்பள்ளி பேரூராட்சிக்கு நாமகிரிப்பேட்டை, சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 755/2003, நாள் 23.07.2003ல் தான சாசனம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மேற்படி மனைப் பிரிவில் ஒதுக்கப்பட்ட 15800 சதுர அடி பூங்கா நிலத்தில் 2023-2024ஆம் ஆண்டு அம்ரூத் 2.0 திட்ட நிதி ஒதுக்கீட்டில் கீழ்க்காணும் பணியினை மேற்கொள்ள அரசாணை எண். 43(4D) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 03.11.2023ல் அரசாணை பிறப்பிக்கப்பட்டு, சீராப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறை ஆணை ந.க.எண். 172/2023 நாள் 27.12.2023ல் பணி ஒப்படைப்பு ஆணை வழங்கப்பட்டு, பூங்கா அமைத்தல் பணி மேற்கொள்ளப்பட்டு, பணி நிறைவு செய்யப்பட்டு, தற்போது பொதுமக்கள் பயன்பாட்டில் விடப்பட்டுள்ளது என்ற விவரத்தினை பணிவுடன் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

வ.எண்.	வேலையின் பெயர்	மதிப்பீடு தொகை ரூ. (இலட்சம்)	ஒப்பந்ததாரர் பெயர்	பணி முடிக்கப்பட்டு செயலாக்கம் கொண்டு வரப்பட்ட நாள்
1	வார்டு எண்.9 சீராப்பள்ளி காட்டுக்கொட்டாய் தாரணிராசி நகர் குடியிருப்பு மனை பிரிவு சர்வே எண். 200/4ல் பூங்கா அமைத்தல்.	28.00	செந்தில்முருகன், இன்ப்ராஷ், நாமகிரிப்பேட்டை	15.04.2025

மேற்படி மனைப்பிரிவில் 15,800 சதுர அடி பூங்கா நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் மேற்கண்ட திட்டப்பணி 6,500 சதுர அடி நிலத்திற்கு மட்டுமே செயலாக்கம் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு, சீராப்பள்ளி பேரூராட்சிக்குட்பட்ட தாரணிராசி நகர் பூங்கா நிலத்தில் 7,000 சதுர அடி நிலத்தில் விநாயகர் கோவில் கட்டி பொதுமக்கள் வழிபாடு செய்வதற்கென இப்பேரூராட்சி மன்றம் மற்றும் நிர்வாகத்தின் மூலம் எந்தவொரு அனுமதி ஆணையும் வழங்கப்படவில்லை. அவ்விடத்தில் பொதுமக்களால் மிக சிறிய அளவில் விநாயகர் சிலை வைத்து கோவில் கட்டி வழிபாடு செய்து வருவதை நிலைப்பாட்டில் காண இயலுகிறது. மேற்படி வழிபாட்டு அமைப்பு ஏற்படுத்தியது குறித்து எவ்வித குறிப்பும் இவ்வலுவலகத்தில் இல்லை என்ற தகவலையும், மேற்கண்ட புகார் மனுவிற்கான விளக்கத்தினையும், அதற்கான ஆவணங்களையும் இத்துடன் இணைத்து பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5. மனுதாரர் திரு. B. சுதேஷ் என்பவர் 14.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- நாமக்கல் மாவட்டம், சீராப்பள்ளி பேரூராட்சிக்குட்பட்ட தாரணிராசி நகரில் பேரூராட்சிக்கு சொந்தமான 17,000 சதுர அடி பூங்கா நிலத்தில், 10,000 சதுர அடியில் சிறுவர் பூங்கா உள்ள நிலையில் மீதமுள்ள 7,000 சதுர அடி நிலத்தை தனிநபர் ராஜேந்திரன் என்பவரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, தனக்கென ஒரு விநாயகர் கோவிலை கட்டியுள்ளார்.

- மேலும், மேற்காணும் ஆக்கிரமிப்பு செய்துள்ள 7,000 சதுர அடி நிலமானது தனது நிர்வாக கட்டுப்பாட்டில் உள்ளது என ஆக்கிரமிப்புதாரர் திரு. ராஜேந்திரன் என்பவர் ஒரு அறிவிப்பு பலகை கோவில் அருகில் வைத்துள்ளார்.

- பேரூராட்சிக்கு சொந்தமான 7,000 சதுர அடி நிலத்தில் அருகில் உள்ள கிராம மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு மின் வாரிய அலுவலகம் அமைக்க பேரூராட்சி மூலம் இடம் ஒதுக்கீடு செய்யுமாறு மிக பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

- எனவே தாரணிராசி நகர் பூங்கா இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட 7,000 சதுர அடி இடத்தை உடனடியாக மீட்க ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான சீராப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 13.08.2026 நாளிட்ட கடித ந.க. எண். 102/2026ல், தனக்கு உடல் நலம் சரியில்லாத காரணத்தினால் தன்னால் 14.08.2026 அன்று நடைபெறும் விசாரணக்கு வர இயலாது எனவும், தனது சார்பாக பேரூராட்சியில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் திரு. சே. யோகேஸ்வரன் என்பவரை விசாரணைக்கு ஆஜராக அனுமதி அளிக்குமாறு கோரியுள்ளார்.

7. எதிர்மனுதாரரான சீராப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலரின் கோரிக்கையை இம்முறைமன்ற நடுவத்தால் ஏற்கப்பட்டது. அதன் அடிப்படையில் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. சே.யோகேஸ்வரன் என்பவர் 14.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- நாமக்கல் மாவட்டம், சீராப்பள்ளி பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 200/14 முதல் 201/1,2,3A, 3-B–ல் 3.60 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு மனைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதில் பூங்கா அமைக்க 15,800 சதுர அடி நிலத்தை தான சாசனம் மூலம் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டு பத்திர பதிவுத் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

- 2023-24ஆம் ஆண்டு அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் சர்வே எண். 200/4ல் 15,800 சதுர அடி இடத்தில் ரூ.28.00 இலட்சம் மதிப்பீட்டில் 6,500 சதுர அடியில் பேரூராட்சி வாயிலாக பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

- மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ளபடி தாரணிராசி நகர் பகுதியில் அப்பகுதி குடியிருப்புதாரர்களால் 15 ஆண்டுகளுக்கு முன்னர் பேரூராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடத்தில் சிறிய அளவில் (6x6=36 சதுர அடி அளவில் கோவில் கட்டிடம் & 16x26=416 சதுர அடியில் திறந்தவெளி அட்டை அமைப்பு) விநாயகர் கோவில் கட்டி வழிபட்டு வந்தனர். கோவில் கட்டுவது தொடர்பாக பேரூராட்சியில் எந்தவிதமான அனுமதியும் வழங்கப்படவில்லை.

- மேலும் தற்போது புகார் வரப்பெற்றதின் அடிப்படையில் 23.07.2026ஆம் தேதியன்று பேரூராட்சி செயல் அலுவலர் அவ்விடத்தினை ஆய்வு செய்ததில் ஆக்கிரமிப்பு நடைபெற்றுள்ளது என கண்டறியப்பட்டது. அதனைத் தொடர்ந்து பேரூராட்சி

செயல் அலுவலர் மற்றும் கிராம நிர்வாக அலுவலருடன் சேர்ந்து அவ்விடத்தினை 13.08.2026ஆம் தேதியன்று ஆக்கிரமிப்புகளை அகற்ற முயன்றதில் அப்பகுதி குடியிருப்புதாரர்கள் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் வகையில் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். எனவே ஆக்கிரமிப்பு அகற்றும் பணி மேற்கொள்ள முடியவில்லை.

- மேற்காணும் சூழ்நிலையில் ஆக்கிரமிப்பினை அகற்றும் பொருட்டு நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவரின் கவனத்திற்கு கொண்டு சென்று சட்டம் ஒழுங்கு சீர்கேடின்றி ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

- மேலும் இன்று நடைபெற்ற விசாரணையின்போது மனுதாரர் பேரூராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ள பூங்கா OSR இடத்தில் மின் வாரிய அலுவலகம் அமைக்க அனுமதி கோரியுள்ளார். ஆனால் பேரூராட்சிக்கு பொது பயன்பாட்டிற்காக தானமாக வழங்கப்பட்ட OSR இடத்தில் எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அதற்கு மட்டும்தான் பயன்படுத்த முடியும் என சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளதால், மனுதாரரின் கோரிக்கையினை ஏற்க இயலாது என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான சீராப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் பேரூராட்சி இளநிலை உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

நாமக்கல் மாவட்டம், சீராப்பள்ளி பேரூராட்சிக்கு சொந்தமான தாரணிராசி நகரில் அமைந்துள்ள 17,000 சதுர அடி பூங்கா நிலத்தில், 10,000 சதுர அடியில் சிறுவர் பூங்காவாக உள்ள நிலையில், மீதமுள்ள 7,000 சதுர அடி பூங்கா நிலத்தை தனிநபர் ராஜேந்திரன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்து, தனக்கென ஒரு விநாயகர் கோவில் கட்டியுள்ளார் எனவும் இவ்விடமானது தனது நிர்வாக கட்டுப்பாட்டில்தான் உள்ளது என அறிவிப்பு பலகை ஒன்றினை கோவிலுக்கு அருகில் வைத்துள்ளார் என புகாராக தெரிவித்திருப்பதையும் மற்றும் 7,000 சதுர அடி பூங்கா நிலத்தில் ஒரு மின்வாரிய அலுவலகம் அமைத்திட கோரியுள்ளதையும் மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

சீராப்பள்ளி பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண். 200/4ல் தானமாக வழங்கப்பட்ட 15,800 சதுர அடி பூங்கா நிலத்தில் 2023-24ஆம் ஆண்டு அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.28.00 இலட்சம் மதிப்பீட்டில் 6,500 சதுர அடியில் பேரூராட்சி மூலம் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது எனவும், மனுதாரர் புகாராக தெரிவிக்கும் தாரணிராசி நகரில் 15 ஆண்டுகளுக்கு முன்னர் பேரூராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடத்தில் அப்பகுதி குடியிருப்புதாரர்களால் சிறிய அளவில் ஒரு விநாயகர் கோவில் (6 x 6 = 36) சதுர அடி கோவில் கட்டடம் மற்றும் 16 x 26 = 416 சதுர அடியில் திறந்தவெளி அட்டை அமைப்பு) கட்டி வழிபட்டு வந்துள்ளனர் எனவும் கோவில் கட்டுவது தொடர்பாக பேரூராட்சியால் எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை எனவும், தற்போது வரப்பெற்ற புகாரின் அடிப்படையில் பேரூராட்சி செயல் அலுவலர் 23.07.2026 அன்று தல ஆய்வு செய்து, ஆக்கிரமிப்பு நடைபெற்றது கண்டறியப்பட்டு, 13.08.2026 அன்று வருவாய்த் துறை மூலம் ஆக்கிரமிப்புகளை அகற்ற முற்பட்டதில் அப்பகுதி குடியிருப்புதாரர்களின் எதிர்ப்பு காரணமாக ஆக்கிரமிப்பு அகற்றும் பணி மேற்கொள்ளப்பட முடியவில்லை எனவும், இருப்பினும் இதுகுறித்து நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவரின் கவனத்திற்கு கொண்டு சென்று ஆக்கிரமிப்புகளை அகற்ற

உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்திருப்பதை பேரூராட்சி இளநிலை உதவியாளரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மேலும், பேரூராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ள பூங்கா OSR இடத்தில் மின்வாரிய அலுவலகம் அமைக்க கோருவது குறித்து, தானமாக வழங்கப்பட்ட OSR இடத்தில் எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அதற்கு மட்டும்தான் பயன்படுத்த முடியும் என சட்ட விதிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரரின் கோரிக்கையை ஏற்க இயலாது என பேரூராட்சி இளநிலை உதவியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பதை இம்முறைமன்ற நடுவம் எற்றுக்கொள்கிறது.

மேற்காணும் நிலையில், பேரூராட்சி இளநிலை உதவியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி, பேரூராட்சிக்குட்பட்ட தாரணிராசி நகரில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாக வருவாய்த்துறை மூலம் ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை விரைந்து மேற்கொள்ளுமாறு சீராப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. B. சுதேஷ்,
   68A, ஐயங்காடு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் எதிரில்,
   சீராப்பள்ளி, நாமகிரிப்பேட்டை, இராசிபுரம்,
   நாமக்கல் மாவட்டம் - 637 406.
2. செயல் அலுவலர்,
   சீராப்பள்ளி பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).(பெயரிட்ட உறையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம், ராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை–28.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் சென்னை–600 032

30/9/26
செயலாளர்.
30/9/26.